13

முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், திருநெல்வேலி.9.
ந.க.எண்.3249/ஆ2/2014 நாள்– 02.06.2014

---

பொருள்: வழக்கு – டபிள்யு.பி.(எம்.டி.) 3230/14 – திரு ஜி.அந்தோணி நிக்சன், பட்டதாரி ஆசிரியர் – ஹோலி ரெடிமீர்ஸ் மேல்நிலைப் பள்ளி, திசையன்விளை – ஆங்கில முதுகலை பட்டதாரி ஆசிரியர் – பதவி உயர்வு வழங்க வேண்டி தொடர்ந்த வழக்கு – சார்பாக.

பார்வை:
1. சார்ந்த ஆசிரியரின் விண்ணப்பம் நாள்–05.02.14.
2. சென்னை, உயர்நிதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.டபிள்யு.பி.(எம்.டி.) 3230/14 நாள்–25.02.14.
3. பொதுத் தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி துணை இயக்குநர் (மின் ஆளுமை) ஒ.மு.எண்.064755/ஜி2/இ2/13 நாள்–04.09.13.
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மே.நி.க.) ஒ.மு.எண்.37384/டபிள்யு5/இ2/14 நாள்–12.05.14.

--

திசையன்விளை, ஹோலிரெடிமீர்ஸ் மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரியும் திரு ஜி.அந்தோணி நிக்சன் என்பவர் ஆங்கில முதுகலை பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வு வழங்க வேண்டி தொடர்ந்த வழக்கில் பார்வை (2) ல் கண்டுள்ளபடி பின்வருமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

The first respondent (Chief Educational Officer, Tirunelveli) is directed to consider the representation made by the petitioner dated:05.02.14 and pass appropriate orders on merits and in accordance with law with ina period of eight weeks. உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அன்னாரின் 05.02.14 நாளிட்ட மனு விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்பட்டது.

திசையன்விளை, ஹோலி ரெடிமீர்ஸ் மேல்நிலைப் பள்ளியில் ஆங்கில முதுகலை பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த திருமதி B.எஸ்தர் என்பவர் 10.11.13–ல் காலமாகியுள்ளார். எனவே ஆங்கில முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடம் 11.11.13 முதல் காலி ஏற்பட்டுள்ளது. இதே பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும் திரு ஜி.அந்தோணி நிக்சன் என்பவர் கீழ்க்காணும் கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ளார்.

பி.எஸ்சி., (தாவரவியல்)
எம்.ஏ., (ஆங்கிலம்)
பி.எட்.,

எனவே ஆங்கில முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடத்திற்கு பதவி உயர்வு மூலம் நியமனம் செய்திட முழுத் தகுதி பெற்றுள்ளதாகவும், தனக்கு ஆங்கில முதுகலை பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வு வழங்க வேண்டியும், அக்காலிப் பணியிடத்தில் 05.02.14 முதல் ஆங்கில முதுகலை பட்டதாரி ஆசிரியராக நேரடியாக நியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி பி.மைக்கேல் ஜோஸ்பின் என்பவரின் நியமனத்திற்கு ஒப்புதல் வழங்கக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் 1973 மற்றும் விதிகள் 1974–ல் முதுகலை பட்டதாரி ஆசிரியர் (மொழி), நியமனத்திற்கு, நியமனம் செய்யப்படும் பதவியில் முதுகலையில் (மொழி பாடத்தில்) பட்டமும் மற்றும் பி.எட். கல்வித் தகுதி அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதி இருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே மேற்